## பலூன் வியாபாரி மீது நடவடிக்கை

# என்ன நடந்தது?

## கோலாலம்பூர் மாநகர் மன்றம் விளக்கம்



கோலாலம்பூர், மார்ச் 30-

நடைபாதையில் லைசென்ஸ் வைத்திருக்காத வியாபாரிகள் பொருட்களை வைத்து வியாபாரம் செய்வதால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது எனவும் பெருநாள் காலத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது எனவும் கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்றுத் தெரிவித்தது.

வெள்ளிக்கிழமை இரவு ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மானில் லைசென்ஸ் இன்றி பலூன் விற்றவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதால் சண்டை மூண்ட சம்பவம் பற்றி அது விளக்கமளித்தது.

நடைபாதையில் லைசென்ஸ் இன்றி சிலர் வியாபாரம் செய்தது ரோந்துப் பணியின் மூலம் தெரிய வந்ததாக டிபிகேஎல் அறிக்கை கூறியது. அங்கு வந்த அதிகாரிகள் லைசென்ஸ் இன்றி வியாபாரம் செய்தவர்களை அங்கிருந்து செல்லும்படி கேட்டுக் கொண்டனர். அவர்கள் ஒத்துழைப்பும் அளித்தனர். ஆனால் பலூன் விற்றவர் மட்டும் உத்தரவைக் கடைப்பிடிக்க மறுத்தார்.

இரண்டு முறை எச்சரித்த பிறகும் அவர் வழக்கம்போல் அங்கு பலூன் வியாபாம் செய்ததாக அந்த அறிக்கை தெரிவித்தது. அவர் மீது நடவடிக்கை எடுத்தபோது அவர் முரட்டுத்தனமாக நடந்து கொண்டார். அமலாக்கப் பிரிவு பணியாளரைப் பிடித்துத்தள்ளி இருக்கிறார். இதில் யாருக்கும் காயமில்லை என்றும் அந்த அறிக்கை மேலும் தெரிவித்தது.